**தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை - 2023**
-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிஅத்தகண்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தெஹிஅத்தகண்டிய பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலையான வைப்புத்தொகை வட்டி வருமானம் ரூபா 676,650 அதிகமாகக் கணக்கிடப்பட்டமை மற்றும் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 83,158 ஆன வட்டி வருமானமொன்று மீளாய்வாண்டிற்கான வருமானமொன்றாக கணக்கிடப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிலையான வைப்புத்தொகை வட்டி வருமானம் ரூபா 759,808 அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும்போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | **விடயம்** | **தொகை** | **வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று** | **சபையின் கருத்துரை** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 248,927,701 | (i) காணி உறுதிப்பத்திரம்<br>(ii) மெய்மையாய்வு அறிக்கை<br>(iii) நிலையான சொத்துப் பதிவேடு | காணி உறுதிப் பத்திரம் மற்றும் மெய்மையாய்வு அறிக்கையை பெறுவதற்கும், நிலையான சொத்துப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக் களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வாகனம் மற்றும் வண்டி | 82,554,814 | (i) நிலையான சொத்துப் பதிவேடு<br>(ii) மெய்மையாய்வு அறிக்கை | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | இயந்திரம் மற்றும் உபகரணம் | 28,212,796 | நிலையான சொத்துப் பதிவேடு | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக் களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 5,273,253 | | | |
| (உ) | இணைந்த வைப்புக்கள் | 95,569 | (i) மீதி உறுதிப்படுத்தல்<br>(ii) பட்டோலை மற்றும் பதிவேடு | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) | 33,34 மற்றும் 35 ஆம் விதகள் | வீத வரிப்பணத்தை செலுத்தாதவர்கள் தொடர்பான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு ஆதனங்களை தடை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | தேவையான சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 59 மற்றும் 67 ஆம் விதிகள் | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் வருமானப் பரிசோதகர் அல்லது தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு சந்தை வியாபாரம் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது வருமானப் பரிசோதகர் பதவி வெற்றிடமாக உள்ளதுடன் இப்பதவியில் பதிற் கடமை அதிகாரியாக பணிபுரிபவர் அலுவலக உதவியாளர் ஆவார். வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் பதிவேட்டை நாளதுவரை யாக்குவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உடனடியாக திருத்தம் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (iii) | 218 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை பரிசோதனை | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை செய்யப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | வாகன எரிபொருள் தகனப் பரிசோதனை 12 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடப்பட்டதன் பின்னர் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வாகனங்களிலும் எரிபொருள் பரிசோதனை இந்த வருடத்திற்குள் மேற்கொள்ளப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,707,370 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,903,119 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய வருடத்துடன் தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2023 **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப் பட்ட வருமானம | 2022 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2022 **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,639,312 | 1,833,172 | 1,664,976 | 2,319,442 | 1,649,311 | 1,483,222 | 1,555,086 | 2,151,246 |
| ii. | வாடகை | 17,544,027 | 15,726,511 | 14,850,934 | 2,769,076 | 16,341,697 | 10,844,798 | 19,072,517 | 1,893,499 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,125,500 | 2,503,210 | 2,520,710 | 508,800 | 2,102,500 | 2,331,712 | 2,167,062 | 526,300 |
| iv. | ஏனைய வருமானம் | 7,908,310 | 10,233,586 | 8,538,811 | 1,964,465 | 4,387,860 | 5,198,578 | 5,398,102 | 269,689 |
| | மொத்தம் | **29,217,149** | **30,296,480** | **27,575,431** | **7,561,783** | **24,481,368** | **19,858,310** | **28,192,767** | **4,840,734** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை வீதவரி மீதி ரூபா 2,319,442 ஆக இருந்ததுடன் 2023 சனவரி 01 இல் அறவிடப்படவேண்டியிருந்த நிலுவை வீதவரி ரூபா 2,151,246 ஆன பெறுமதியில் 2023 ஆம் ஆண்டில் ரூபா 272,376 ஆன தொகையொன்று மட்டும் அறவிடப்பட்டிருந்ததுடன் , அதன் பிரகாரம் நிலுவைத் தொகை அறவீட்டின் முன்னேற்றம் 13 சதவீதமாக மாத்திரம் மிகக் குறைந்த மதிப்பில் காணப்பட்டது. | நிரந்தர வருமானப் பரிசோதகர் ஒருவர் சபையில் இல்லாமையால் நிலுவைத் தொகையை வசூலிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதை முடிந்தவரை நிர்வகித்து நிலுவை வருமானத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 2,263,942 ஆக இருந்ததுடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சபையினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை கடை வாடகை வருமானத்தை வசூலிப்பதற்கு குறிப்பிட்ட நிலுவை கடை வாடகை உரிமையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டு, சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவற்றை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப விதிகள் விதிக்கப்படுவதற்கான விடயங்கள் இனங்காணப்பட்டு உப விதிகள் விதிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2023 திசெம்பர் 31 வரையில் 05 உப விதிகள் மட்டும் விதிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வினால் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்படுகின்ற பிரதேச சபைச் சட்டத்தின் 123 இன் கீழ் உப விதிகள் கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் தற்போது 05 உப விதிகள் விதிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | உபவிதிகள் விதிக்கப்பட்டு நடவடிக்கைகள் சட்டரீதியாக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தின் மேலதிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இலக்கம் 2.2 மற்றும் 2.3 இற்கு முரணாக மாதந்தோறும் உருவாக்கப்படுகின்ற சுமார் 16 டொன் உக்காத குப்பைகள் மண் போட்டு மூடப்படாமல் திறந்த வெளியில் கொட்டப்பட்டிருந்தது. இவ்வாறு உக்காத குப்பைகளை திறந்தவெளியில் அகற்றுவதால் கடுமையான சுற்றாடல் பாதிப்பு ஏற்படும் என்பதால் உக்காத குப்பைகளை மீள்சுழற்சி வேலைத்திட்டததை நோக்கிச் செல்வதில் சபையினால் உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டும். | முறையான கழிவு சேமிப்பு நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குப்பைகளை அகற்றும் முறைமை முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் மாதந்தோறும் 04 டொன் உக்கும் குப்பைகள் மற்றும் 16 டொன் உக்காத குப்பைகளுமாக 2023 ஆம் ஆண்டிலும் , 240 டொன் அளவு குப்பைகள் ரூபா 10,770,730 ஆன செலவொன்று செய்யப்பட்டு சேகரிக்கப்பட்டிருந்ததுடன் உக்கும் குப்பைகளிலிருந்து 950 கிலோகிராம் அளவான கொம்போஸ்ட் உற்பத்தி செய்யப்பட்டு அதில் 800 கிலோகிராம் ஆன அளவொன்று விற்பனை செய்யப்பட்டு ரூபா 16,000 ஆன வருமானமொன்று மட்டும் சேகரிக்கப்பட்டிருந்தது. | இரசாயன உரங்களை மீண்டும் பயன்படுத்தியமையால் சேதன உரங்களின் தேவை குறைவடைந்தமையால் விற்பனை குறைந்துள்ளது. அதனால் உற்பத்தி குறைந்துள்ளது. சேதன உரங்களின் பயன்பாடு குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு, தேவையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | கொம்போஸ்ட் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதில் சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2022 பொருள் மெய்மையாய்வின் மூலம் பற்றாக்குறையெனக் கண்டறியப்பட்ட 62 பொருட்கள் தொடர்பாக, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இனங்காணப்பட்டு உரிய பொருட்களை சபைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், களஞ்சியக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை முறைப்படுத்துவதில் சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் | முறையான களஞ்சியக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இனங்காணப்பட்டு உரிய பொருட்களை சபைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசங்களுக்குச் சொந்தமான ஆதனங்களின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்ட வீதவரி அறவிடப்பட்டு வருவதுடன் உரிய காலத்தில் அந்த ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வீதவரி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீள்மதிப்பீடொன்று செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அவ்வப்போது கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் இற்றை வரை அது தொடர்பான பதிலொன்று கிடைக்கவில்லை.மீண்டும் கோரிக்கை விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு வரித் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் வசமுள்ள பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ள 05 வாகனங்கள் 02 தொடக்கம் 09 வருட காலமாக விளைவற்றதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், அதில் 04 வாகனங்கள் அகற்றப்படுவதற்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும் அகற்றுவதற்கான பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | 04 வாகனங்களினை அகற்றுவதற்கான பணிகள் கிழக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். பேக்கோ லோடரை பழுது பார்ப்பதற்கு சுமார் ரூபா 35 இலட்சம் செலவாகுமென்பதுடன் அந்த பணத்தை சபைக்கு செலவிடுவதற்கு முடியாததால் பழுது பார்ப்பதற்கு முடியாத நிலையில் உள்ளது. | விளைவற்ற நிலையில் காணப்படும் வாகனங்களை அகற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் (PT02) கீழ் பாடசாலைப் பை மற்றும் பாடசாலை பாதணிகள் உற்பத்திச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள கட்டிடத்தின் புனரமைப்பு பணிகளுக்கு ஒதுக்கீடுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையினால் இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 18,328,150 பெறுமதியான 23 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயன் படுத்தப்படாமல் | இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக குறிப்பிட்ட கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள், இரண்டாம் கட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துமாறு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்கள் தற்காலிகமாக பழைய பிரதேச சபைக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்தன. கட்டிடங்களின் பழுதுபார்க்கும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு விட்டதாகவும், முடிந்தவுடன் உடனடியாக இந்த உபகரணங்கள் அந்த இடத்தில் வைக்கப்படுவதற்கு | கட்டிடம் புனரமைக்கப்பட்டு இயந்திரங்கள் மற்றும் , உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| களஞ்சியசாலையில் விளைவற்றதாக காணப்பட்டதுடன் பயன்படுத்தப்படாமல் இருந்தபோதே அவற்றின் உத்தரவாதக் காலமான 09 மாதங்களும் கடந்திருந்தது. | உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |

**3.5 சொத்து முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பொறுப்பில் காணப்பட்ட 07 வாகனங்களின் உரிமை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமை எதிர்வரும் ஆண்டில் சபையின் பெயருக்கு கையகப்படுத்தப்படும். | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயரிற்கு மாற்றப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான 44 மயானங்கள், 38 விளையாட்டு மைதானங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபைக்கு சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதி அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் 15 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், இதன் காரணமாக அந்தந்த பதவிகளுக்கான பணிகளை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டபடி, ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும், எமது நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் எழுந்துள்ள போதிலும், கிழக்கு மாகாண சபையினால் ஆட்சேர்ப்புக்களை செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக பிரச்சினை தீர்க்கப்பட முடியாதிருந்தது.. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆம் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வுக் குழுவொன்று இந்த ஆண்டில் தீவிரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கான செயற்பாட்டு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு மற்றும் கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொண்டமை தொடர்பான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை கண்டறியப்பட்டு அவற்றை அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கி கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |